# நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் 2021

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 1 வருடம் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்களிப்பாளர்கள் | நூலகம் நிறுவனம் |
| பாதீடு (Budget) | |

## நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

இலங்கையின் நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் சார்ந்து இலங்கையின் வெவ்வேறு நிர்வாக துறைகள் சார்ந்து வெளியிடப்படுகின்ற ஆவணங்கள் ஒரு காலகட்டத்தின் பதிவுகளாகக் காணப்படுகின்றன. அவ்வாறான ஆவணங்களை இனங்கண்டு ஆவணாப்படுத்தல் மூலமாக ஒரு பிராந்தியம் சார்ந்த சமூக, பொருளாதர மற்றும் புவியியல் சார்ந்த விடயங்களை அனுகுதல் இலகுவாக அமையலாம். அத்துடன் பல்வேறு ஆய்வு சார்ந்த நடவடிக்கைகளுக்கும் அவை உசாத்துணையாகவும் அமைகின்றன.

நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும் பண்டைய வரலாற்றினையும், அந்தப் பிரதேசத்தின் அரசியற் தனித்தன்மைகளையும், ஒவ்வொரு பிராந்துயமும் இலங்கையின் வேறு

இராசதானிகளுடன் கொண்டிருந்த உறவுகளையும் நிர்வாக துறைசார் ஆவணாங்களூடாக ஆவணப்படுத்துவதே இச்செயற்றிட்டமாகும்.

## அறிமுகமும் பின்புலமும்

நூலகம் நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றினையும், வாழ்க்கை முறைகளினையும், அவர்களின் வாழ்வுடன் பிணைந்த சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் விடயங்களையும் ஆவணப்படுத்தி வருகிறது. தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்கும் வவுனியா மாவட்டத்தினை ஆவணப்படுத்துவது இந்த வகையில் முக்கியத்துவம் மிக்கது. தமிழ் சமூகங்களின் வரலாற்று உருவாக்க முயற்சிகளிலும், வடபுலத் தமிழ் சமூகங்களின் வரலாற்று உருவாக்க முயற்சிகளிலும் ஒரு வகையான யாழ் மையவாதம் அவதானிக்கப்படுகிறது. வவுனியா பிராந்தியத்தினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சி இந்த யாழ் மையவாதத்தினைச் சவாலுக்கு உட்படுத்தும் ஒரு செயன்முறையாகவும் அமையும்.
இலங்கையின் நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் சார்ந்து இலங்கையின் வெவ்வேறு நிர்வாக துறைகள் சார்ந்து வெளியிடப்படுகின்ற ஆவணங்கள் ஒரு காலகட்டத்தின் பதிவுகளாகக் காணப்படுகின்றன. அவ்வாறான ஆவணங்களை இனங்கண்டு ஆவணாப்படுத்தல் மூலமாக ஒரு பிராந்தியம் சார்ந்த சமூக, பொருளாதர மற்றும் புவியியல் சார்ந்த விடயங்களை அனுகுதல் இலகுவாக அமையலாம். அத்துடன் பல்வேறு ஆய்வு சார்ந்த நடவடிக்கைகளுக்கும் அவை உசாத்துணையாகவும் அமைகின்றன.

காலனித்துவக் காலத்திலும் அதற்கு முன்னைய காலங்களிலும் நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகள் எப்படி இருந்தது, அங்கு யார் வாழ்ந்தார்கள், அவர்களாது குடியியல் பரம்பல், நிலஅளவைகள், சமூகம் மற்றும் பொருளாதார சார்ந்த வெவ்வேறு நடைமுறைகள் காணாப்ப்ட்டன. ஆயினும் அவை சார்ந்த விடயங்கள் அரசதுறைகள் சார்ந்த பதிவுகளாகக் காணாப்பட்டதுடன் அவை அதிக அளவிலே ஆவணப்படுத்தப்படவில்லை. அவ்வகையான ஆவணங்களைக் கண்டறிந்து அவற்றை ஆவணப்படுத்துவது இந்தச் செயற்றிட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாக இருக்கும். அத்துடன் ஒவ்வொரு பிராந்திய ரீதியான சனத்தொகை நாளடைவில் எவ்வாறு அதிகரித்தது, மாறியது போன்ற விடயங்களையும், அவற்றுக்கான பின்னணிக் காரணிகளையும், சனத்தொகைக்கும் பிராந்தியத்தின் கலை, கலாசாரங்களுக்கு இடையிலான தொடர்புகளை ஆணவப்படுத்துவதற்கு இந்தச் செயற்றிட்டம் வழிசெய்யும்.

## இலக்குகளும் நோக்கங்களும்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே நிர்வாக துறைசார்ந்த ஆவணங்களின் வகிபங்கினை வெளிக்கொண்டு வருதல்.
- இலங்கையின் நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்தல் சார்ந்து இலங்கையின் வெவ்வேறு நிர்வாக துறைகள் சார்ந்து வெளியிடப்படுகின்ற பல்வேறு வகையான ஆவணங்கள் காணப்படுகின்றன. அவற்றை முழுமையாக ஆவணப்படுத்தல் ஓர் நீண்ட கால திட்டமாக அமையலாம். அதனால் முதற்கட்டமாக நிர்வாக துறைசார் அறிக்கைகளை இனங்கண்டு ஆவணப்படுத்தலே இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும்..

- நிர்வாக துறைசார் ஆவணங்கள் ஊடாக அவதானிக்கப்படும் பன்மைத்துவம், அதிகார மையங்கள், மக்களின் எதிர்ப்பு முயற்சிகள் பற்றி ஆவணங்கள் வாயிலாக வெளிப்படுத்தல். அத்துடன் நிர்வாக துறை பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணையவெளியில் உருவாக்குதல்.

## செயற்பாடுகள்

- செயற்திட்ட வடிவமைப்பு
  பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்ளை மீளாய்ந்து, செயற் திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைப்பொருளாக துல்லியமான செயற் திட்டம் அமையும்.

- சந்திப்புக்கள்/நிகழ்வுகள்/பயிற்சிப் பட்டறைகள்
  பிராந்திய மற்றும் மாவட்ட செயலாளர்கள், நிர்வாக துறைசார் அதிகாரிகளை தாங்கள் தொடர்பான ஆவணப்படுத்தல் ஈடுபட வைப்பதும், அதற்கான capacity கூட்டுவதும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடு தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகாப்பும் (Collection Development & Digital Preservation) பிராந்திய மற்றும் மாவட்ட செயலாளர்கள், நிர்வாக துறைசார் அதிகாரிகள் ஊடாக நிர்வாக துறைசார் ஆவணங்கள் தொடர்பான தகவல் வளங்களை கண்டடைந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல்.

- தரவுத் தொகுப்புகள் (Data Sets)
  மேற்குறிப்பிடப்பட்ட secondary மற்றும் primary தரவுச் சேகரிப்புக்களின் ஊடாகப் பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக (structured data) ஆக மாற்றித் தொகுத்தல். நிர்வாக துறைசார் அறிக்கைகளை முதற்கட்டம் பட்டியல் படுத்தி மின்வருடுதல்.

## எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- பணியாளர்களை தெரிவு செய்வதும், அவர்களுக்கான இடம், உபகரணங்களை வழங்குவதும் சவாலகாக அமையலாம். அதற்காக நிர்வாக துறைசார் அலுவலகர்கள் ஊடாக சமூக நிறுவனங்களுடன் அல்லது ஆவணப்படுத்தல் சார்ந்து ஆர்வமுள்ளவர்களை அணுகி பணியாளர்களைத் தெரிவு செய்தல்.

- தற்போதைய அரசியல் சூழ்நிலை கள ஆவணப்படுத்தல், தகவல் தொகுப்பு போன்றவற்றை சிக்கல் ஆக்கலாம். நிர்வாக துறைசார் ஆவணங்களை ஆவணப்படுத்துவது என்பது ஒரு பெரும் பணி. முதற்கட்டமாகவே இந்தச் செயற்றிட்டம் நடைபெறும் என்பதை அனைத்து பங்குத்தாரர்களுக்கும் மற்றும் நிர்வாக துறைசார் அலுவலர்களுக்கும் சிறந்த புரிதலை ஏற்படுத்தி

மாவட்டத்திலுள்ள நிர்வாக துறைசார் முக்கிய ஆளுமைகளுக்கூடாக தொடர்புகளை ஏற்படுத்தி அதனூடாக ஆவணப்படுத்தல் செயற்பாடுகளை முன்னகர்த்த முடியும்.

எதிர்பார்க்கப்படும் பாதீடு
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு

**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**